1968 பிப்ரவரி 28]

போன்ற ஏனைய மாநிலங்களுக்குத் திட்ட உதவி அவ்வாறு குறையாத ஒரு நிலையும், மத்திய அரசின் செயற் குறிப்புகளிலிருந்து உருவாவதற்கு இடமேற்பட்டுள்ளது. எனவே, 1966-67, 1967-68, 1968-69 ஆகிய இந்த மூன்றாண்டுகளுக்கும், கடன் கரைப்பதற்கென இந்திய அரசு வழங்கும் உதவித் தொகையான 18·15 கோடி ரூபாய், இயல்பான திட்ட உதவிக்குக் கூடுதலாக அமைவது தான் நேர்மையாகும். 18·15 கோடி ரூபாய் அளவிற்கு முழுமையாக உதவியளிக்க இந்திய அரசின் வழிவகை நிதி நிலை இடங்கொடுக்காவிடினும், திட்டத்திற்குரிய பலவகைய வளர்ச்சிக் கடனுக்கு ஈடுசெய்ய முற்படாமல், 1968-69-ம் ஆண்டிற்குரிய உதவியான 6·05 கோடி ரூபாயையாவது வழங்குவதில், மத்திய அரசிற்கு இடர்ப்பாடு ஏதும் இருக்காது என நினைக்கின்றேன். அவ்வாறு உதவி யளிப்பின், வருகிற ஆண்டில் வளர்ச்சி வேகம் தணியாது போற்றிவர உதவியாயிருக்கும்.

அகவிலைப்படி வித உயர்வுகளின் விளைவு

12. கடன் பொறுப்புகளின் சுமை பெருகியிருப்பது ஒருபுறமிருக்க விலைவாசிகளின் ஏற்றத்தையொட்டியும், குறைந்த ஊதியம் பெறும் பணியாளர்களின் வாழ்க்கை நிலையைக் காக்க வேண்டிய தேவையைக் கருதியும், அரசாங்கப் பணியாளர்களின் அகவிலைப்படி வீதங்கள் அடுத்தடுத்து உயர்த்தப்பட்டது முற்றிலும் நியாயமானதாயிருப்பினும், அவை மாநில நிதி நிலையில் கடும் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. 1965-66-ம் ஆண்டின் இறுதி வரையில் வழங்கப்பட்ட அகவிலைப்படி வீத உயர்வுகள், நான்காம் நிதி ஆணைக்குழுவின் தீர்ப்பின வாயிலாக ஈடு செய்யப்பட்டிருக்க, அதன் பின்னர் வழங்கியுள்ள உயர்வுகளுக்கு, அத்தகைய உதவி ஏதும் கிட்டவில்லை. மாநில அரசுகளின் நிலையான இக்குறையினைப் போக்க "கஜேந்திர காட்கர் ஆணைக்குழு" திட்டவட்டமான சில செயற் குறிப்புக்களை வகுக்குமென எதிர்ப்பார்த்திருந்தோம். ஆனால் அக்குழு, "மாநில அரசுப் பணியாளர்கட்குச் செலுத்தப்படும் அகவிலைப் படி வீதங்கட்கும் மத்திய அரசுப் பணியாளர்கட்குச் செலுத்தப்படும் வீதங்கட்குமிடையே வேறுபாடு இருப்பது எந்த வகையிலும் நியாய மாகாது" என்ற வகையில் திட்ட வட்டமான தனது முடிவைத் தெரிவித்து விட்டு, இதற்கென இந்திய அரசு சிறப்பு உதவி ஏதேனும் வழங்கும் கேள்வி, தனது ஆய்விற்குப் புறம்பானது என்று இயம்பி வாளாவிருந்துவிட்டது.

4. தீர்மானம்—

முதலமைச்சரின் நிதிநிலை அறிக்கை உரையை அவை முன்னவர் படித்தல்.

THIRU K. VINAYAKAM : Sir, I move—

"That instead of the Hon. Chief Minister, who is not well, straining himself by reading his Budget speech, the Hon. Leader of the House be requested to read the remaining Budget speech".

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, I support the Motion moved by the Hon. Member Thiru K. Vinayakam.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

3. 1968-69-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம்— பேரவைமுன் வைத்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் தோன்றக்கூடிய இப்பெற்றிவாய்ந்த பல்வேறு தேவையினங்கள் தனது ஆய்வில் அடங்கவில்லையென நான்காம் நிதி ஆணைக்குழுவே உணர்ந்து, "அத்தகைய தேவைகளைக் குறித்து ஆய்வதற்கும், தேவைப் படும் இடங்களில் எல்லாம் மத்திய உதவியளிக்கவும் பொருத்தமான நடைமுறை ஒன்றினை வகுக்க வேண்டியிருக்கும்" என அறிவித்துள்ளது.